சுருக்கம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் – இயக்குநர் குழுமம் – அலுவலர்கள் பதவி மாற்றம் – புதிய உறுப்பினர்கள் நியமனம் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி–3) துறை

அரசாணை (பத்தாண்டு) எண்.613

நாள் 23 .10.2009.
ஐப்பசி – 6,
திருவள்ளுவர் ஆண்டு – 2040
படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (பத்தாண்டு)எண்.437, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மஅதி3)துறை, நாள் 14.7.2009
2. முதன்மைச் செயலாளர், நிதித்துறை கடித எண்.6476/BPE/2009–4, நாள் 6.10.2009.
3. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்களின் கடித எண். 2100/சி2/2006, நாள் 7.10.2009.

*******

ஆணை:-

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் இயக்குநர் குழுமத்தினை முதலாவதாகப் படிக்கப்பட்ட ஆணையில் மறுசீரமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. நிதித்துறை செயலர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன இயக்குநர் குழுமத்தில் ஒருவராக இடம் பெற்றிருந்த திரு. ப்ரவீண்குமார், இ.ஆ.ப., சிறப்புச் செயலாளர், நிதித்துறை அவர்களுக்குப் பதிலாக திரு. ஆர்.கிர்லோஷ்குமார், இ.ஆ.ப., துணைச் செயலாளர், நிதித்துறை அவர்களை நியமனம் செய்யலாம் என்று இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். அதே போன்று, வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநராகவும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன இயக்குநர் குழுமத்தில் உறுப்பினராகவும் பணியாற்றி வந்த திரு. என். முருகானந்தம், இ.ஆ.ப., அவர்களின் பணி மாறுதலைத் தொடர்ந்து அத்திட்டத்தின் புதிய இயக்குநர் திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., அவர்களை தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன இயக்குநர் குழுமத்தில் ஒருவராக நியமனம் செய்து ஆணையிடுமாறும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன இயக்குநர் குழுமத்தில் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்ட திருமதி. பூஜா குல்கர்னி, இ.ஆ.ப., துணைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள் பணி மாறுதலாகிச் சென்று விட்டதால், அவரது இடத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பாக வேறு ஒருவரை நியமனம் செய்ய வேண்டியுள்ளது.

(தபிபா)

3. மேலே பத்தி இரண்டில் கூறப்பட்ட காரணங்களின் அடிப்படையில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன இயக்குநர் குழுமத்தில் இயக்குநர்களை மாற்ற முடிவு செய்து தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன இயக்குநர் குழுமத்தில் கீழ்க்கண்ட மாறுதல்களைச் செய்து அரசு ஆணையிடுகிறது:-

| வ. எண் | தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன இயக்குநர் குழுமத்தில் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்ட அலுவலர் பெயர் | தற்பொழுது புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள அலுவலரின் பெயர் |
|---|---|---|
| 1. | திரு. ப்ரவீன் குமார், இ.ஆ.ப.,<br>அரசு சிறப்பு செயலாளர், நிதித்துறை | திரு. ஆர். கிர்லோஷ் குமார், இ.ஆ.ப.,<br>அரசு துணைச் செயலாளர், நிதித்துறை |
| 2. | திரு. என்.முருகானந்தம், இ.ஆ.ப.,<br>திட்ட இயக்குநர்,<br>“வாழ்ந்து காட்டுவோம்” திட்டம் | திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப.,<br>திட்ட இயக்குநர்,<br>“வாழ்ந்து காட்டுவோம்” திட்டம் |
| 3. | திருமதி. பூஜா குல்கர்னி, இ.ஆ.ப.,<br>அரசு துணைச் செயலாளர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை | திரு. வ. வீரிச்செட்டி,<br>அரசு துணைச் செயலாளர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |

4. மேலும் திரு. ப்ரவீண்குமார், இ.ஆ.ப, அரசு சிறப்புச் செயலாளர், நிதித்துறை அவர்களது பெயரில் உள்ள தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பங்குகளையும் திரு. ஆர். கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., அரசு துணைச் செயலாளர், நிதித்துறை அவர்களுக்கு மாற்றம் செய்யவும்அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,
சென்னை – 600 032.
திரு. ப்ரவீண் குமார், இ.ஆ.ப.,
அரசு சிறப்புச் செயலாளர், நிதித்துறை, சென்னை –600 009.
திரு. ஆர். கிர்லோஷ்குமார், இ.ஆ.ப.,
அரசு துணைச் செயலாளர், நிதித்துறை, சென்னை –600 009.

(துபிபா)

<u>பெறுநர்</u>
<u>தொடர்ச்சி</u>

திரு. என். முருகானந்தம், இ.ஆப.,
வாழ்ந்து காட்டுவோம் திட்ட )(
முன்னாள் இயக்குநர், )(
சென்னை – 600 018. )(
திரு. தீரஜ்குமார், இ.ஆ.ப., )(
வாழ்ந்து காட்டுவோம் திட்ட இயக்குநர், )(
சென்னை – 600 018. )(
அனைத்து இயக்குநர்கள், தமிழ்நாடு மகளிர் நல )(
மேம்பாட்டு நிறுவனம், சென்னை – 600 018. )(
(தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை
இயக்குநர் மூலமாக )

நகல்:
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக
உதவியாளர், சென்னை – 600 009.
முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.